# நற்றிணையில் பூக்கள்

*க. மீனா*
முதலாமாண்டு முதுகலைபட்ட மாணவி, தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783501

**ஆய்வுச்சுருக்கம்**

*நற்றிணை என்பது தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகை என்ற சங்க இலக்கிய வகைப்பாட்டில் காணப்படும் ஒரு நூலாகும். பண்டைய தமிழர்கள் செடி, கொடிகள் எனவும் இலையும், பூவும், கனியும் என்று இவை அனைத்தும் நிறைந்த இயற்கைச் சோலையில் வாழ்ந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நானிலத்திலும் பூக்கள் பல்வேறு வகையாக காணப்படும். அந்த திணைகளுக்கு அந்நிலத்தில் மலர்ந்த பூக்களை வைத்தே நிலங்களுக்கு பெயரிட்டுள்ளனர். மலர்கள் பல்வேறு விதமான மணம், நிறம் ஆகியவற்றைக் கொண்டு இருக்கும். எட்டுத்தொகை நூலான நற்றிணையில் பூக்களின் பல்வேறு வகைகளில் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகையான பூக்களும் எந்த திணையில் மலர்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளன. நற்றிணையில் உள்ள 67 மலர்களில் சில மலர்களான காயா, இருட்ப்பை, நொச்சி, புன்னை போன்ற மலர்களை மட்டும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.*
***கலைச் சொற்கள்:*** *நற்றிணை, பூக்கள், காயா, புன்னை.*

## முன்னுரை

*சங்க இலக்கிய நூல்களாக எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் கூறப்படுகிறது. அதில் எட்டுத்தொகை நூலில் ஒன்றாக குறிப்பிடும் நற்றிணையில் பல பூக்களைப் பற்றிய செய்திகள் கூறப்படுகிறது. நற்றிணை 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் உடையது 175 புலவர்களால் பாடப்பெற்றது இதை தொகுத்தவர் யார் என தெரியவில்லை. தொகுப்பித்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். இதனை நற்றினை நானுறு என்றும் கூறுவர். நற்றிணையில் உள்ள ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு வகையான பூக்கள் மலர்கின்றது அம் மலர்களின் வகைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## திணையும் மலரும்

*தொல்காப்பியர் திணைக்கு உரிய கருப்பொருளாக,*

***தெய்வம் உணாவே மா மரம் புள் பறை***
***செய்தி யாழின் பகுதியோடு தொகை,***
***அவ்வகை பிறவும் கரு என மொழிப[1]***

*இவை எட்டையும் சுட்டப்பட்டுள்ளார். இதில் பூக்கள்கூறவில்லை என்றாலும் கூறியதால் பூ, நீர் என்பவற்றையும் சேர்த்து இளம்பூரணர் கருப்பொருளாக சுட்டுகிறார். இளம்பூரனார் ஒவ்வொரு நிலத்திற்குரிய கருப்பொருள்களில் பூக்களை முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம் நெய்தல் என ஐந்து திணைக்கும் தனித்தனி பூக்களை கூறியுள்ளார்.*

***முல்லைத் திணைக்குரிய பூக்களான***
***முல்லை பிளவு தளவம்[2]***

*ஆகிய பூக்களை தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையில் கருப்பொருளாக இளம்பூரனார் குறிப்பிட்டுள்ளார்.*

## பூக்களின் வகைகள்

*பூக்களின் வகைகளை பிரிப்பதற்கு அவற்றின் தன்மைகள் எடுத்துக்காட்டுகிறது பூக்களின் நிறம், மணம், மென்மை, வண்ணம், சுவை, கவர்ச்சி அடிப்படையில் கோட்டுப்பூ கொடிப்பூ, நிலப்பூ நீர்ப்பூ என வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியர் மரம், புல் இரண்டின் உறுப்புகளை,*

*புறக் காழனவே புல் என மொழிப*[3]

***அகக் காழனவே மரம் என மொழிப***[4]

***இலையே முறியே தளிரே கோடே***
***சினையே குழையே பூவே அரும்பே***
***நனை உள் உறுத்த அணையவை எல்லாம்***
***மரனொடு வருஉம் கிளவி என்ப***[5]

*எனநூற்பாக்களின்வழியும்நிலஅடிப்படையில் இதனை.*

***எந் நிலம் மருந்தின் பூவும் புள்ளும்***
***அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்***
***வந்த நிலத்தின் பயத்த ஆகும்.***

*என்கிறார்.*

*ஐந்து வகை நிலத்திற்கும் உரிய பூக்களும், பறவைகளும் அந்த நிலத்திற்கு உரியதாக மட்டும் அல்லாமல் வேறு நிலத்திற்கு வருமானால் அப்படிவந்தநிலத்திற்குஉரியகருப்பொருளாக கூறுகிறார். பூவைகுறிப்பதற்குசங்ககாலத்தில் பலவகைச் சொற்கள் இருந்தது என்பதை இலக்கியத்தின் வழி அறிய முடிகிறது.*

**இருப்பை**

*இருப்பைப் பூ வெள்ளை நிறம் உடையது மலைபாங்கானசெம்மைநிலப்பகுதியில் இதன் மரம் வளர்ந்து நிற்கும் கோடை காலத்தில் இந்த பூக்கள் அதிகமாக பூக்கும் இலுப்பை பூ மரத்திலிருந்து வாடாமல் கீழே உதிர்ந்து விழும் தன்மை உடையது. இந்த மலர்களை எடுத்து மகளிர்கள் விற்பனை செய்தனர் என இலக்கியங்கள் செப்புகின்றன.*

***இருப்பை பூவின் மொட்டு பூனையின் பாதத்தைப் போல இருக்கும்*** *என அகத்திணை (331) பாடல் குறிப்பிடுகிறது. இந்த மலர் வெண்மை நிறம் உடையது இந்த இருப்பைப் பூ சூரியனின் ஒளி பட்டவுடன் வாடிவிடும் தன்மையுடையது. இருப்பைப் பூ மரத்திலிருந்து விழக்கூடிய காட்சி வானத்திலிருந்து ஆலங்கட்டி மழை பொழிவது போல் இருக்கும் என்பர். அம்பறாத்தூணிதலைதிறப்பதுபோல இருப்பை மொட்டுமலர்கின்றகாட்சிகாணப்படுவதையும், மலரின் அகத்துப்பஞ்சு போன்ற துய் இருக்கும் என்றும் அது வெளியே நீண்டு காணப்படுகிறது என்பதையும்,*

***"அத்த இருப்பைப் பூவின் அன்ன***
***துயித்தலை இறவு"*** *-(நற் .111)*

*என்ற நற்றினை பாடலடி சுட்டுகின்றன.*

*செந்நில பகுதியில் இந்த வெண்ணிற பூக்கள் கீழே உதிர்ந்து கிடப்பது குருதியின் மீது கொழுப்பு படர்ந்து இருப்பதை போன்று காட்சியளிப்பதை,*

***வெருக்கடி யன்ன குவிமுகில் இருப்பை***[7]

*என்ற அகநானூறு பாடல் உணர்த்துகின்றன.*

**காயா**

*காயா தற்போது "காசர்" என்று அழைக்கப்படுகிறது இந்த காயா காட்டுப் பகுதியிலும் செந்நிலப் பகுதியிலும் வளர்ந்து இருக்கும் முதுகேனிற் காலத்தில் பொலி விழுந்திருக்கும் மழை பெய்தவுடன் மரத்தின் கிளைகள் தழைத்துக் கருமையுடன் பளபளவென காட்சியளிக்கின்றன. கருநீல மலர் பூ கொத்துகளை உடையவை நீல மணி போல அழகான பூவைக் கொண்ட இச்செடி அழகு இல்லாத கொம்புகளையும் கொண்டு இருக்கும். நீலமணி போல மலர்களையுடைய காயாவின் குறுங்கிளைகள் இறங்கக் கார் பருவம் தொடங்கியது இதனை,*

***"பன்மலர் காயாங்குறிஞ்சிணை"*** *- (நற்-242)*

*என்ற அடி சுட்டுகிறது.*

*மொட்டாக மயிலின் கழுத்தைப் போன்ற நிறத்துடனும் ஒத்துக் காணப்படும் என்பதை,*

***"கருநனைக் கணமயில் அவிழஉம்"***[8]

*என்று சுற்றியுள்ளனர். இதில் காயாமலர் கருநீல நிறத்துடனும் அழகு உடையதாக கூறப்பட்டுள்ளது.*

**நொச்சி**

*நொச்சி என்பதற்கு மதில் என்ற வேறு பெயரும் உண்டு. நொச்சியில் கருநொச்சி,*

*வெண்நொச்சி, மலைநொச்சி என மூன்று வகை உண்டு. இவற்றுள் கருநொச்சி மரம் வீடுகளில் விரும்பி வளர்த்துள்ளனர். இக்கரு நொச்சியின் பூவே பெரும்பாலும் போர் பூவாகவும் போர் சின்னமாகவும் அமைந்தது இந்த நொச்சி மரத்தின் மீது மௌவல் கொடியும் படர்ந்து இருக்கும்.*

*நொச்சிப் பூக்களை இளம் பெண்கள் தலையாடையாகவும் மாலையாகவும் சூடியுள்ளனர் என்பதை,*

***"கருங்குழல் நொச்சிகண் ஆர் குரு உத்தழை***
***மெல்இலை மகளிர் ஐது அகல் அல்குல்.***
***கண்ணி கட்டிய கதிர அன்ன***
***ஒண்குரல் நொச்சித் தெரியல் சூடி" - (நற்.200)***

*என்ற பாடல் அடி விளக்குகின்றன.*

**புன்னை**

*சங்க இலக்கியத்தில் மலரினங்களில் சிறப்பான இடத்தை பெற்றிருப்பது புன்னை ஆகும். கடி இரும்புன்னை மணம் இருக்கக் கூடியது. என நச்சுனார்க்கினியர் கூறுகிறார். கடற்கரை ஓரமாக நீர்நிலை பகுதியில் வளரக்கூடியவை புன்னை மரம். நெய்தல் திணைக்குரிய மரமாக கடல் சார்ந்த பகுதியில் இருக்கும் என்ற செய்தியை,*

***"உள்ளூர்க் குரீ இக் கருவுடைத் தண்ண***
***பெரும் போது அவிழ்ந்த கருங்தால் புன்னைக்"***
***- (நற் .231).***

*என்ற அடி சுட்டுகின்றது.*

*மலர்களின் நுண்ணிய பூந்துகள் வீழப்பெற்ற நெய்தல் மலர் பொன்னோடு பொருந்திய நீல மணி போல அழகு பெறத் தோன்றுவதை,*

***புன்னை நுண்தாது உரைத்தகு நெய்தல்***
***பொன்படு மணியின் பொற்பத் தோன்றும்'***

*என்ற ஐங்குறுநூறு பாடல் அடிகள் விளக்குகின்றன.*

**குறிஞ்சி**

*குறிஞ்சிப் பூ மலையில் மட்டுமே பூக்கும். தகுந்த வெப்ப நிலையில் மட்டும் வளர்ந்து பூக்கும் இந்த குறிஞ்சிப் பூ 12 வருடத்திற்கு ஒரு முறை பூக்கும். இந்த குறிஞ்சி பூ 5 வண்ணத்தில் பூக்கும் இம் மலரின் காரணமாக மலைக்கு குறிஞ்சி என்ற பெயர் வந்தது.*

**முடிவுரை**

*பூவிற்கு "மலர்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டாலும் பூ என்ற சொல்லே வழக்கில் உள்ளது மலர் என்பதற்கு மலர்ச்சி தோன்றுதல், நிறைதல், விரிதல், மொட்டுவிழ்தல் என்ற பல பெயர்கள் உள்ளன. இவ்வாறு எட்டுத்தொகை நூல்களான நற்றிணையில் உள்ள பூக்களைப் பற்றி ஆய்வு செய்யப்பட்டது.*

**சான்றெண் விளக்கம்**

1. *திருஞானசம்பந்தம்.ச.முனைவர் (உ.ஆ), தொல். பொருள். அகத்திணை, நூ.20.*
2. *மேலது., ப.18.*
3. *மேலது.,நூ.630.*
4. *மேலது.,நூ.631.*
5. *மேலது.,நூ.633.*
6. *மேலது.,நூ.21, ப.19.*
7. *செயபால்.இரா.முனைவர்(உ.ஆ), அகநானூறு, பாடல்.267*
8. *மோகன். இரா முனைவர் (உ.ஆ), சிறுபாண். பா.165.*
9. *தட்சணா மூர்த்தி. அ. முனைவர் (உ.ஆ), ஐங்குறுநூறு, பா.189*

**துணை நூற்பட்டியல்**


1. *செயபால்.இரா.முனைவர் (உ.ஆ) - அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை - 600 098.*
2. *தட்சணாமூர்த்தி. அ. முனைவர் (உ.ஆ)- ஐங்குறுநூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.*
3. *திருஞானசம்பந்தம்.ச.முனைவர் (உ.ஆ)- தொல்காப்பியம் பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், 93, தெற்கு வீதி, திருவையாறு - 613 204.*